01. என்னுயிரே (காணிக்கைப் பாடல்)
இயல், இசை: சாந்தப்பன்
பாடியவர்: லிண்டா ஜார்ஜ்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

எம் உயிரே எம் இறைவா
உமக்கென யாம் தரும் காணிக்கை
உவப்புடன் ஏற்று அருள்புரிவாய்
உன்னத பலியாய் மாற்றிடுவாய்.

சரணம்

1. உழைப்பின் பலனாய் கிடைத்த பொருட்களை
   கரங்களில் ஏந்தி உம் பீடம் வந்தோம்
   உகந்ததை படைக்கும் உன்னத நேரம்
   உள்ளதை எல்லாம் உம்மிடம் தந்தோம்
   உவப்புடன் ஏற்று அருள் புரிவாய்
   உன்னத பலியாய் மாற்றிடுவாய்.

2. அப்பமும் இரசமும் உம் பதம் வைத்தோம்
   உம் உடல் இரத்தமாய் மாறச் செய்யும்
   உம் பலி தொடர உம் வழி நடக்க
   உறவினில் மகிழ்ந்து உம்மிடம் தந்தோம்
   உவப்புடன் ஏற்று அருள் புரிவாய்
   உன்னத பலியாய் மாற்றிடுவாய்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Easter 2022)**